TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1972 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்–விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மதுவகைகள் உற்பத்தி

* 571 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் "திராட்சை ரசம்" தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் ஏராளமான திராட்சை விளைச்சல் இருக்கிறது. அங்கே திராட்சை ரசம் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்குவதால், அங்கிருக்கும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் திராட்சைக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். நம் மாநிலத்திற்கு வெளி மாநிலத்திலிருந்து திராட்சை ரசம் வந்துகொண்டிருக்கிறது. அதையும் நம் மாநிலத்திலேயே தயாரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கோவையில் அதிகமான அளவுக்கு திராட்சை கிடைக்கிறது என்றும், அது மாநிலத்தின் பல் வேறு பகுதிகளிலும் கிடைக்கிறது என்றும், அதிலிருந்து "ஒயின்" தயாரிக்கும் தொழிற்சாலை கிருஷ்ணகிரி, தர்மபுரி அருகிலும், சேலத்திற்கு அருகிலும், திண்டுக்கல் அருகிலும் நிறுவுவதற்கான

செயற்குறிப்பு ஒன்று, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்களால் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல இலாக்காக்களும் பல கட்டங்களில் தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றனர்.

திரு. எம். தேவராசன்: நீலகிரி மாவட்டத்தில் பெருமளவில் பார்லி கிடைப்பதால் அங்கே ஒரு பீர் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா? அரசுக்கு உத்தேசமில்லையென்றால், தனியார் யாராவது ஆரம்பிக்க முன்வந்தால் அதற்கு அரசு ஆதரவு கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கேள்வி, திராட்சையைப் பற்றியது; பார்லியைப்பற்றியதல்ல.

திரு. அ. முனியாண்டி: நிலக்கோட்டை தொகுதியில் அதிகமாக திராட்சை கிடைப்பதால் திண்டுக்கல்லில் அமைக்கும் தொழிற்சாலையை நிலக்கோட்டையிலேயே அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலில் விளைகிற திராட்சையை மூலப் பொருளாகக் கொண்டு, அங்கே போதைச் சத்து அடங்கிய "ஒயின்" தயாரித்தால் 12 சத வீத சத்து அடங்கியதாக இருக்கலாம் என்கிற அளவுக்கு சில குறிப்புகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி இன்னும் அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

* 572 Q.--THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state the number of licences issued for the manufacturing of brandy and liquor from cashaw apple.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏதுமில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: முந்திரிக்கொட்டை ஓடுகளிலிருந்து ஒரு உயர்தரமான பிளாஸ்டிக் தயாரிப்பதற்கான வசதி இருப்பதாகவும், அதற்கு மேல்நாடுகளில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் கூறப்படுகிறதே, அப்படிப்பட்ட தொழிற்சாலையை இங்கே ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முந்திரிப் பழத்திலிருந்து மது தயாரிப்பதைப்பற்றியது, மூலக்கேள்வி.